DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 108/2023**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | சுலோச்சனா | Husband Name – | ராமசுப்பிரமணியன் |
| Age | 75 | Village – | போடிநாயக்கனூர் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.04.2026.

**வாதிகள் தரப்பு முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி. வாதிகள் தரப்பு முதல் சாட்சியாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் படித்துப் பார்த்து கையெழுத்திட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரைச் சொத்தினை காட்டக்கூடிய தோராய வரைபடம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும், 26.02.1968 ம் தேதியிட்ட வழக்குரைச் சொத்தினைப் பொறுத்து ஜெயகோபாலன் மற்றும் சுப்பையா ஆகியோர்கள் சேர்ந்து எழுதிக்கொண்ட பாகவிஸ்தி பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆகும், 18.03.2019 ம் தேதியிட்ட சரசா என்பவரின் இறப்புச் சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும், 28.06.2011 ம் தேதியிட்ட ராமசுப்பிரமணியன் 08.06.2011 ம் தேதி இறந்ததற்கும், மேற்படியாருக்கு இந்த வாதிகளை வாரிசுகள் என்பதற்கு போடிநாயக்கனூர் வட்டாட்சியர் கொடுத்த வாரிசு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) **வா.சா.ஆ.4** ஆகும், 07.09.2015 ம் தேதியிட்ட வழக்குரைச் சொத்திற்கு வாதிகள் பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகும், 23.11.2022 ம் தேதியிட்ட வழக்குரை சொத்தினை காட்டக்கூடிய TSLR Sketch கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆகும், வழக்குரைச் சொத்திற்கு வாதிகள் செலுத்திய சொத்துவரி ரசீதுகள் (எண்ணிக்கை 5) அசல் **வா.சா.ஆ.7** ஆகும், வழக்குரை சொத்திற்கு வாதிகள் செலுத்திய குடிநீர் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 5) அசல் **வா.சா.ஆ.8** ஆகும், வழக்குரை சொத்திற்கு வாதிகள் செலுத்திய மின்சாரம் வரி ரசீது அசல்

**வா.சா.ஆ.9** ஆகும், 29.03.2023 ம் தேதியிட்ட 2 ம் வாதி பிரதிவாதிகள் மீது போடி நகர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு கை நகல் **வா.சா.ஆ.10** ஆகும், 30.03.2023 ம் தேதியிட்ட மேற்படி புகாருக்கு போடி நகர் காவல் நிலையத்தில் கொடுத்த மனு ஏற்பு ரசீது அசல் **வா.சா.ஆ.11** ஆகும், 03.04.2023 இ 10.04.2023 ம் தேதியிட்ட வழக்குரை சொத்தினை அளவீடு செய்ய வாதிகள் தரப்பு போடிநாயக்கனூர் நகராட்சி நில அளவையருக்க செலுத்திய கட்டண ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.12** ஆகும், வழக்குரை சொத்தினை காட்டக்கூடிய புகைப்படங்கள் எண்ணிக்கை 6 (63 BSA சான்றிதழ் இணைக்கப்படவில்லை) **வா.சா.ஆ.13** ஆகும், 11.04.1993 ம் தேதியிட்ட ஜெயகோபாலன் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.14** ஆகும், மனுச்சொத்திற்கான நில அளவையர் வரைபடம் அசல் **நீ.ம.சா.ஆ.1** ஆகும், மனுச்சொத்திற்கான ஆணையர் வரைபடம் அசல் **நீ.ம.சா.ஆ.2** ஆகும், மனுச்சொத்திற்கான ஆணையர் அறிக்கை அசல் **நீ.ம.சா.ஆ.3** ஆகும்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரால் **வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.13** ஆவணங்கள் வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. **வா.சா.ஆ.14** ஆவணம் நகல் ஆவணம் என்றும், அதை சான்றாவணமாக குறியீடு செய்ய முடியாது என ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.04.08 16:42:45 +0530

District Munsif,
Bodinayakanur.